

# இளம் குழந்தைப் பருவ அமைப்புகளில் விளையாட்டு மூலம் கற்றல்

TAMIL

## விளையாட்டு என்றால் என்ன?

குழந்தைகள் அர்த்தமுள்ள விளையாட்டு அடிப்படையிலான அனுபவங்களில் ஈடுபடும்போது கற்கவும் வளரவும் செய்கின்றனர் என்பதை உலகெங்கிலும் நடைபெறுகிற ஆய்வுகள் காட்டுகின்றன.

*"குழந்தைகளின் அறிவார்ந்த, உடல், சமூக மற்றும் ஆக்கபூர்வத் திறன்கள் பலவற்றைத் தூண்டவும் ஒருங்கிணைக்கவும் விளையாட்டு அவசியம். குழந்தைகளுடனான நீடித்த மற்றும் பகிரப்படும் ஊடாடல்களை ஆதரிக்க, ஒருங்கிணைந்த கற்பித்தல் மற்றும் கற்றல் அணுகுமுறைகளை இளம் குழந்தைப் பருவ நடைமுறைகள் பயன்படுத்துகின்றன. குழந்தைகள், ஒவ்வொரு நாளும் சந்திக்கும் சமூக மற்றும் இயற்கை உலகம், மக்கள், இடங்கள், பொருள்கள் மற்றும் அனுபவங்களைப் பற்றிய கருத்துகளைப் புரிந்துகொள்வதற்கும் உருவாக்குவதற்கும் விளையாட்டு மற்றும் பிற வாய்ப்புகள் மூலம் கற்றுக்கொள்கிறார்கள்.*

- VEYLDF, 2016, பக்கம் 14

விளையாட்டு உங்கள் குழந்தைக்கு இயற்கையாகவே வருகிறது என்பதுடன், அவர்களின் கற்றல் மற்றும் மேம்பாட்டின் ஒரு முக்கிய பகுதியாக உள்ளது. குழந்தைக்கு அவர்களின் உலகத்தைப் புரிந்துகொள்ளவும் வலுவான அடையாள உணர்வை வளர்த்துக்கொள்ளவும் விளையாட்டு உதவுகிறது. கற்பனை செய்வது, பாசாங்கு செய்வது, உருவாக்குவது, ஆராய்வது, விசாரணை செய்வது, தகவல்தொடர்பு கொள்வது, கேள்வி கேட்பது, பேசுவது, கவனிப்பது, சிந்திப்பது, உணர்வது, தொடுவது, நுகர்வது போன்றவற்றை விளையாட்டின் மூலம் உங்கள் குழந்தையால் செய்ய முடியும். பேச்சுவார்த்தை நடத்துவது, சிக்கலைத் தீர்ப்பது, இடர்களை எதிர்கொள்வது, புதிய விஷயங்களை முயற்சிப்பது, விஷயங்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதைப் பார்ப்பது ஆகியவை விளையாட்டில் சம்பந்தப்படுகின்றன. உங்கள் குழந்தை தன்னைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் கற்றுக்கொள்வார், விளையாட்டின் விதிகளைக் கற்றுக்கொள்வார், நண்பர்களை உருவாக்குவார், உறவுகளை வளர்த்துக் கொள்வார் மற்றும் தனது கல்வியாளர்கள் மற்றும் பிற குழந்தைகள் உட்பட தன்னைச் சுற்றியுள்ளவர்களை நம்புவார்.

குழந்தைகள் சில நேரங்களில் தனியாக விளையாடுவார்கள், ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுடன் விளையாடுவார்கள் மற்றும் சிறிய அல்லது பெரிய குழந்தைகளின் குழுக்களில் விளையாடுவார்கள். விளையாட்டு என்பது இரைச்சலானதாகவோ அமைதியானதாகவோ இருக்கலாம், செயலற்றதாகவோ சுறுசுறுப்பானதாகவோ இருக்கலாம்.

*"தடையின்றி விளையாடும் காலநேரமானது குழந்தைகளுக்கு பல்வேறு வகையான வெளிப்படைப் பொருட்களையும் வளங்களையும் பயன்படுத்தி, புதிய ஒன்றை உருவாக்குவதற்கும், ஆராய்வதற்கும், கண்டுபிடிப்பதற்கும் தேவையான நேரத்தைக் கொடுக்கிறது."*

- VEYLDF, 2016, பக்கம் 21

## விளையாட்டு மூலம் கற்றல்

ஆசிரியர்களும் கல்வியாளர்களும், சேவையில் கலந்துகொள்கின்ற ஒவ்வொரு குழந்தையின் தனிப்பட்ட ஆர்வங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குரிய திட்டத்தைத் திட்டமிடுகின்றனர். குழந்தைகளால் உட்புற மற்றும் வெளிப்புற இடங்களுக்கு இடையில் சுதந்திரமாக செல்ல முடிகின்ற ஒரு வெளிப்படையான கற்றல் சூழலில் பரந்த அளவிலான விளையாட்டு அடிப்படையிலான அனுபவங்களை வழங்குவதன் மூலம் அவர்கள் இதைச் செய்கிறார்கள்.

இசை, கதைகள், கலந்துரையாடல் போன்ற சில வழிகாட்டும் முறையான செயல்பாடுகள் அங்கு இருக்கும். நாளின் பெரும்பகுதிக்கு, எங்கு விளையாடுவார்கள், யாருடன் விளையாடுவார்கள், ஒரு குறிப்பிட்ட விளையாட்டு நடவடிக்கையில் எவ்வளவு நேரம் செலவிடுவார்கள் என்பது பற்றி குழந்தைகள் தாங்களாகவே முடிவுகளை எடுப்பார்கள். குழந்தைகளுக்கு உதவி தேவைப்படும்போது கல்வியாளர்கள் ஆதரவையும் வழிகாட்டுதலையும் வழங்குவார்கள்.

குழந்தைகள் தங்களின் உலகிலும் சந்திக்கும் நபர்களிடத்திலும் ஆர்வமாக, விசாரத்தறிபவராக, அக்கறையுள்ளவராக இருக்கும் வகையில், கற்பதன் மீதான நேசத்தை உருவாக்குவதில் அவர்களுக்கு உதவ, ஆசிரியர்கள் பல்வேறு கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்துவார்கள். அவர்கள் விளையாட்டில் வழிநடத்தலாம், விளையாட்டை முன்னின்று நடத்தலாம் அல்லது சுயமாய் விளையாடுவதில் குழந்தைகளை கவனிக்கலாம்.

## விளையாட்டின்போது குழந்தைகள் என்ன கற்றுக்கொள்கிறார்கள்?

விளையாட்டானது பேசுவதற்கும், கேள்விகளைக் கேட்பதற்கும், சொல்லகராதி மற்றும் மொழி, கல்வியறிவு, எண்ணிக்கை மற்றும் சமூக திறன்களை வளர்ப்பதற்கும் பயிற்சி செய்வதற்குமான வாய்ப்புகளை குழந்தைகளுக்கு வழங்குகிறது. குழந்தைகள் எவ்வாறு மற்றவர்களுடன் தகவல்தொடர்பு கொள்வது மற்றும் தொடர்புள்ளவராக இருப்பது என்பதை விளையாட்டின் மூலம் கற்றுக்கொள்கிறார்கள்.

குழந்தைகள் தாங்கள் கவனித்ததை வெளிக்காட்ட தங்கள் கற்பனையையும் பயன்படுத்துகின்றனர், எடுத்துக்காட்டாக;

- உணவு தயார் செய்வது போல் நடிப்பது
- சிறு குழந்தையைக் கவனித்துக்கொள்வது
- தீயணைப்பு வீரர், மருத்துவர் அல்லது கடைக்காரராக இருப்பது.

இது குழந்தைகள், தங்கள் உலகத்தையும் சமூகத்தையும் புரிந்துகொள்ளவும் உணரவும் உதவுகிறது.

*"உலகளாவிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் என்ற கருத்து உட்பட பல்வேறு அடையாளங்கள் மற்றும் கண்ணோட்டங்களை ஆராய நாடக விளையாட்டு முக்கியமானது. தனிநபர்களுக்கும் குழுக்களுக்கும் இடையிலான ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகளை சரியாக மதிப்பிடுவதற்கும், வெவ்வேறு கண்ணோட்டங்களை மதிக்கவும் குழந்தைகள் ஆதரிக்கப்பட வேண்டும்."*

- VEYLDF, 2016, பக்கம் 18

உங்கள் குழந்தை விளையாட்டில் ஈடுபடும்போது, மற்றவர்களுக்கு ஏற்கத்தக்கதாக உள்ள நடத்தைகளைக் கற்றுக்கொள்ள உதவும் விதிகள் குறித்து அவர்கள் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். உதாரணமாக, குழந்தைகள் ஊஞ்சலில் விளையாட தங்களுக்கான வரிசைக்குக் காத்திருப்பதற்குரிய விதிகளை உருவாக்கலாம். பாதுகாப்பாக இருப்பது, உபகரணங்களைப் பராமரிப்பது, நியாயத்தையும் சமத்துவத்தையும் ஆதரிப்பது ஆகியவற்றில் அனைவருக்கும் உதவும் விதிகளை வகுப்பதில் ஈடுபட குழந்தைகளை அனுமதிப்பதானது, அவர்களின் சிந்தனை மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களுக்கு உதவவும், அவர்களின் தகவல்தொடர்பு மற்றும் சமூகத் திறன்கள் மற்றும் அவர்களின் எண்ணியல் மற்றும் கல்வியறிவு திறன்களை வளர்க்கவும் உதவும்.

தங்களின் விளையாட்டில், குழந்தைகள் தங்களுக்கு இருக்கும் அறிவு மற்றும் யோசனைகளை புதிய, சுவாரஸ்யமான வழிகளில் உருவாக்க முடியும்.

இடர்களை எதிர்கொள்ளலாம், திறமைகளைக் கற்பது மற்றும் பயிற்சிப்பது போன்றவற்றை மேற்கொள்வதில் குழந்தைகள் சில செயல்பாடுகளை மீண்டும் மீண்டும் செய்யலாம், உதாரணமாக;

- தாங்களாகவே உயரமான இடத்திற்கு ஏறுவது
- ஒரு ஜிக்-ஷா புதிரில் நிபுணராவது
- தாங்களாகவே ஆடைகளை அல்லது ஆர்ட் ஸ்மாக் அணிவது
- ஒரு குறுகிய கட்டை மீது விழாமல் நிற்பது
- கத்தரிக்கோலை தாங்களாகவே பயன்படுத்துவது
- தாவிக் குதிப்பது
- ஊஞ்சலில் தங்களைத் தாங்களே தள்ளிக்கொள்வது.

பெரியதாகவும் சிறியதாகவும் உள்ள இச்சாதனைகள், குழந்தைகளுக்கும், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அவர்களின் கற்றலை ஆதரிக்கும் கல்வியாளர்களுக்கும் வெகுமதிளிக்கின்றன.

விளையாட்டு குழந்தைகளுக்கு பின்வருவதற்கான வாய்ப்புகளை அளிக்கிறது; கொண்டாடுவது, சாதிப்பது, வெற்றி பெறுவது, தவறு செய்வது, பயிற்சிப்பது, புதிய தகவலை அல்லது திறன்களை சோதிப்பது, கருத்துக்களை உருவாக்குவது மற்றும் புதிய திறமைகளிலும் அறிவிலும் தேர்ச்சி பெறுவது.

விளையாட்டு என்பது உங்கள் குழந்தை எப்படி கற்றுக்கொள்கிறது என்பதாகும்.

---

**மேற்கோள்கள்**

கல்வி மற்றும் பயிற்சித் துறை, 2016. *விக்டோரியன் இளம் வயது கற்றல் மற்றும் மேம்பாட்டுக் கட்டமைப்பு.*